2013 மே 9]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டுகின்ற அந்த மலைவாழ் மக்களுடைய நலன் கருதியும், மாணவர்களுடைய நலன் கருதியும், அந்த வழித்தடங்களில் கூடுதலாக பேருந்துகளை இயக்குவதற்கு மாண்புமிகு அம்மா அவர்களின் உத்தரவினைப் பெற்று நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 451, மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. முருகன், மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

451—

மாணவர் விடுதி

***7666—திரு. மு. முருகன்:**

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) முதுகுளத்தூர் தொகுதி, கமுதி ஒன்றியம், இராமசாமிபட்டியில் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை மாணவ, மாணவியர் விடுதி கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. அ. முஹம்மத்ஜான், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை இப்பேரவைக்கு அளிக்கிறேன்.*

(அ) மற்றும் (ஆ) முதுகுளத்தூர் தொகுதி, கமுதி ஒன்றியம், இராமசாமிபட்டியில் பிற்படுத்தப்பட்டோர் நல மாணவ, மாணவியர்களின் விடுதி துவக்க கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைத் தங்கள்மூலமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2013 மே 9

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. முருகன் அவர்கள்.*

திரு. மு. முருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறுபான்மையின மக்களின் பாதுகாவலராய்! உலகத் தமிழர்களின் ஒப்பற்ற தாயாய்! இன்றைய தமிழகத்தின் முதல்வராய்! நாளைய பாரதத்தின் பிரதமராய்! (மேசையைத் தட்டும் ஒலி) விசுவாசம் கொண்டவர்களுக்கு விலாசம் தரும் ஒப்பாரும், மிக்காரும் இல்லாத தலைவியாய் விளங்கும் மாட்சிமை பொருந்திய தமிழ்நாட்டு முதலமைச்சர் (மேசையைத் தட்டும் ஒலி) தங்கத் தாரகை புரட்சித் தலைவி அம்மா அவர்கள் புனித மலர்ப் பாதம் பணிந்து வணங்குகிறேன்.*

முற்பகல் 10-50

மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய பதில் முதுகுளத்தூர் தொகுதி, கமுதி வட்டம், இராமசாமிபட்டி, மேல்நிலைப் பள்ளியில் 185 மாணவர்களும், 218 மாணவியர்களும், மொத்தம் 403 மாணவ, மாணவியர்கள் கல்வி கற்று வருகின்றனர். பெரும்பாலான ஏழை எளிய மாணவ, மாணவியர்கள் சுற்றியுள்ள கிட்டத்தட்ட 40 கிராமங்களிலிருந்து வந்து கல்வி பயின்று வருகின்றனர். அவர்கள் தங்கிப் படிப்பதற்கு விடுதி வசதி செய்து கொடுக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பரிசீலனை செய்ய வேண்டுமாய்க் கேட்டுக்கொண்டு, அமருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. அ. முஹம்மத்ஜான்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாழும் வள்ளலாய் கல்வியில் மிகப் பெரிய புரட்சியைச் செய்து வரும் நம்முடைய மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அனைத்து சமுதாய மாணவ, மாணவியர்கள் எந்தத் தடையும் இல்லாமல் கல்வி கற்க வேண்டுமென்ற எண்ணத்தில் மூன்றாம் முறையாக தமிழக முதல்வராகப் பொறுப்பேற்ற 2 வருட காலத்திற்குள் 56 விடுதிகளை ஏற்படுத்தி மிகப் பெரிய சாதனை புரிந்து (மேசையைத் தட்டும் ஒலி) சாதனைச் செம்மலாக விளங்குகின்றார்கள்.*

கமுதி ஒன்றியம், இராமசாமிபட்டியிலிருந்து சுமார் 8 கிலோ மீட்டர் சுற்றளவில் கமுதி, நீராவி, மண்டலமாணிக்கம் மற்றும்

2013 மே 9]

பம்மனேந்தல் ஆகிய இடங்களில் பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறையின் சார்பில் 4 பள்ளி மாணவர் விடுதிகளும், கமுதி மற்றும் நீராவி ஆகிய இடங்களில் 2 பள்ளி மாணவியர் விடுதிகளும் செயல்பட்டு வருகின்றன. இவ்விடுதிகளில் அனுமதிக்கப்பட்ட மாணவ, மாணவியர்களின் எண்ணிக்கை 550 ஆகும். எனவே, இராமசாமிபட்டியைச் சேர்ந்த மாணவ, மாணவியர்கள் மேற்குறிப்பிட்ட விடுதியில் தங்கிப் பயின்று பயனடையலாம். எனினும், கமுதி ஒன்றியம், இராமசாமிப்பட்டியில் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறையின்சார்பில் மாணவ, மாணவியர் விடுதிகள் துவங்கத் தேவையிருப்பின், அது மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு அவர்களுடைய ஆணைக்கிணங்க தேவையான நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தங்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. முருகன் அவர்கள்.

திரு. மு. முருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இராமசாமிபட்டி கிராமத்திற்கு அருகில் நீராவி கரிசக்குளம் என்ற ஒரு பள்ளியில் 50 மாணவர்களும், 50 மாணவியர்களும் தங்கிப் படிக்கக்கூடிய மாணவ, மாணவியர்கள் விடுதி இருக்கிறது. அந்த மாணவர் விடுதியில் ஆண்டிற்கு 10 காலியிடங்கள்தான் உருவாகின்றன. அந்த 10 காலியிடங்களுக்கு கிட்டத்தட்ட 150-லிருந்து 200 மாணவ, மாணவியர்கள் மனு செய்யக்கூடிய சூழ்நிலையில் கிட்டத்தட்ட 140 பேர்களுக்கு மேல் விடுதி கிடைக்காத நிலை இருப்பதால், அந்த நீராவி கரிசக்குளம் மாணவ, மாணவியர் விடுதிகளுக்கு கூடுதலாக 50 மாணவர் மற்றும் 50 மாணவியர் தங்கிப் படிக்கக்கூடிய அளவிற்கு அனுமதி வழங்க வேண்டுமாய்க் கேட்டுக்கொண்டு, இராமசாமிப்பட்டி பகுதியிலே மிகவும் ஏழ்மையான நிலையில் அந்தப் பள்ளியில் படிக்கக்கூடிய மாணவ, மாணவியர்களுக்கு வரும் ஆண்டிலாவது ஒரு மாணவ, மாணவியர்களுடைய விடுதி கட்டித் தர வேண்டுமாய்க் கேட்டுக்கொண்டு, அமருகிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. அ. முஹம்மத்ஜான்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்கள் மூன்றாவது முறையாக முதல்வராகப் பொறுப்பேற்ற பிறகு அனைத்து விடுதிகளிலுமே 100 மாணவர்கள் அல்லது மாணவியர்களைச் சேர்ப்பதற்கு ஆணையிட்டுள்ளார்கள். அதுமட்டுமல்லாமல், தேவை ஏற்படுமானால் 10 சதவீதம் அதிகமான மாணவர்கள் அல்லது மாணவியர்களைச் சேர்த்துக்கொள்வதற்கும் ஆணையிட்டுள்ளார்கள். ஆகவே, வரும் காலத்தில் மாண்புமிகு உறுப்பினர் சொன்னதைப்போன்று, மாணவ, மாணவியர்கள் சேர்த்துக்கொள்ளப்படுவார்கள். மேலும், இராமசாமிபட்டியில் பிற்படுத்தப்பட்டோர் நல விடுதியை ஆரம்பிப்பதற்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்று நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தங்கள்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 452, மாண்புமிகு உறுப்பினர் திரு. வி. முத்துக்குமார், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.*

452—

புதிய வருவாய்க் கோட்டம்

*29695—**திரு. வி. முத்துக்குமார்:**

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விருத்தாசலம் தொகுதி, நல்லூரைத் தலைமையிடமாகக் கொண்டு புதிய வருவாய்க் கோட்டம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. என்.டி. வெங்கடாச்சலம், வருவாய்த் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) மாண்புமிகு முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்பாதங்களைப் பணிந்து வணங்கி, விருத்தாசலம் தொகுதி, நல்லூர் வருவாய்க் கோட்டம், அரசாணை (நிலை) எண் 279-ன்படி, வருவாய்த் துறையால்